# Tamil Nadu Bishops' Council (TNBC)
# Tamil Nadu Latin Bishops' Council (TNLBC)

TNLBC Secretariat | 22/45, Santhome High Road | Chennai - 600 004 | Tamil Nadu | India
T : 044-24611949 | M : 82203 91649 | E : tnbctnlbc@gmail.com | Web : www. tnbctnlbc.in


சென்னை, 02 மார்ச் 2026

TNBC/2026/03/001

**தமிழகக் கத்தோலிக்க ஆயர் பேரவையின்**
**உலக அமைதிக்கான அறிக்கை**

அன்பிற்கினிய குருக்களே, இருபால் துறவிகளே, இறை மக்களே,

தமிழக ஆயர் பேரவையின் சார்பாக உங்கள் அனைவருக்கும் இறைவேண்டல் கலந்த வாழ்த்துகள். கடந்த சில நாட்களாக மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெற்று வரும் போரும், வன்முறை சம்பவங்களும் அமைதியை விரும்பும் அனைவருக்கும், குறிப்பாக கிறிஸ்தவ மக்களுக்கும் அதிக கவலையையும், ஆழ்ந்த துயரத்தையும் அளித்துள்ளது. போர் எப்போதும் மனித குலத்திற்கு அழிவை மட்டுமே தருகிறது என்பது வரலாறு மீண்டும் மீண்டும் நமக்கு உணர்த்திய பாடமாகும். இந்த மத்திய கிழக்கு நாடுகளில் பல நாட்டு மக்கள் வாழ்கின்றனர். இந்தியாவில் இருந்தும் குறிப்பாக தமிழகத்தில் இருந்தும் பலர் வாழ்ந்து வருகின்றனர். இச்சூழலில் அவர்கள் பாதுகாப்பாக வெளியேற முடியாமல் அச்சத்துடன் இருக்கின்றனர். அவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்ட நாடுகளின் அதிகாரிகளையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தப் போரை உடனடியாக நிறுத்தி, உரையாடல் மற்றும் சமரசத்தின் வழியாக நிலையான அமைதியை ஏற்படுத்துமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொள்கின்றோம். போர் அழிவை மட்டுமே உருவாக்கும், அமைதி ஒன்றே மனுக்குலத்தை வாழச் செய்யும். இதை உணர்ந்து கொள்கின்றபோது மனித உயிரின் மரியாதையும் மனுக்குலத்தின் சகோதரத்துவமும் எந்த அரசியல் கருத்துக்கும் மேலானவை என்பதை புரிந்து கொள்ள முடியும். உலக அமைதிக்காக எல்லைகளைத் தாண்டி ஒற்றுமையுடன் குரல் கொடுக்க நல் மனதினர் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம். அமைதிக்காக இறைவேண்டல் செய்வோம், அமைதிக்காக செயல்படுவோம், அமைதியை நிலைநாட்ட உறுதியாக முன்னெடுப்போம் என்கிற உணர்வோடு, **வருகின்ற வெள்ளிக்கிழமை, 06.03.2026 அன்று அமைதிக்கான நாளாகக் கடைபிடித்து**, போர் மேகங்கள் சூழ்ந்த மத்திய கிழக்கு நாடுகளில் நிலையான அமைதி நிலவிட, அன்றைய நாளில் நற்கருணை ஆராதனையை இச்சிறப்பு கருத்தை மையப்படுத்தி செய்வோம். அன்னை மரியாளின் பரிந்துரையைத் திருச்செபமாலை வழியாக நாடி, உலக அமைதிக்காகச் சிறப்பாக மன்றாடுவோம். அமைதியின் ஆண்டவர் அனைவருக்கும், சிறப்பாக உலகத் தலைவர்கள் அதிலும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களுக்குத் தூய ஆவியாரின் துணையால் அருள் வளம் தந்து மக்களின் நலனுக்காகவும் நாடுகளின் அமைதிக்காகவும் குரல் கொடுக்கவும் தொடர்ந்து உழைத்திடவும் ஞானத்தையும் துணிவையும் அருள்வாராக.

**பின் குறிப்பு:** தமிழக ஆயர்கள் தங்கள் மறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளிலும், துறவற சபை இல்லங்களிலும், இவ்வறிக்கையை அனுப்பி, இது குறித்து அறிவிப்பு செய்து வரும் வெள்ளிக்கிழமை (06-03-2026) அன்று சிறப்பான விதத்தில் இறைவேண்டல் மற்றும் நோன்பின் வழியாக உலக அமைதிக்காக மன்றாட அழைப்பு கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

TAMILNADU BISHOP'S COUNCIL President CHENNAI - 600004

+ George Antonisamy

\+ ஜார்ஜ் அந்தோணிசாமி
தலைவர் - தமிழக ஆயர் பேரவை


**PRESIDENT**
Most Rev. Dr. George Antonysamy
Archbishop of Madras - Mylapore
Archbishop's House, No. 41,
Santhome High Road, Chennai - 600 004.
Tel : 044 2461102, 24640833
Email : abpmmsec@gmail.com

**VICE PRESIDENT**
Most Rev. Dr. Lawrence Pius
Bishop of Dharmapuri
Bishops' House, Post Box 32,
Gundalapatty Medu, Dharmapuri - 636701.
Tel : 04342- 2288409
Email : dharmapuridiocese@gmail.com

**SECRETARY**
Most Rev. Dr. Nazarene Soosai
Bishop of Kottar
Bishops' House, P.B. No. 17, Negercoil
Kanyakumar Dt. - 629001.
Tel : 04652-278343, 279152
Email : kottardiocese@yahoo.co.in

**TREASURER**
Most Rev. Dr. S. Antony samy
Archbishop of Madurai,
Archbishop's House,
K. Pudur, Madurai - 625 007.
Tel. No: 0452 - 2566198
Email : abssecretarymdu@gmail.com